கோப்பல் தமிழ்க் கல்வி மையம்
வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!

துளிர் – 3
இதழ் – 6

பிப்ரவரி–2018

ஹேவிளம்பி ஆண்டு
மாசி மாதம்

# துளிர்

## தெனாலிராமன் வரலாறு

*கூனனை ஏமாற்றிய கதை*

*ஒரு நாள் தெனாலி இராமன் மீது பொறாமை கொண்ட ராஜகுரு, ராமன் தன்னை அவமரியாதை செய்து விட்டான் என்று மன்னனைத் தூண்டி விட்டார். தெனாலிராமனின் எந்த சமாதானத்தையும் அரசர் கேட்கத் தயாராக இல்லை. ராஜகுருவை அவமதித்தது மன்னனையே அவமதித்ததாகும். எனவே இக்குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது என்று ராஜகுருவையே தண்டனையளிக்கும்படி ஆணையிட்டார் மன்னர். ராஜகுரு "கழுத்து வரை தெனாலிராமனை மண்ணில் புதைத்து விட்டு யானையின் காலால் தலையை இடறச் செய்து கொல்ல வேண்டும்" என்று தண்டனையளித்தார். காவலர்கள் தெனாலிராமனை இழுத்துக் கொண்டு ஊருக்கு எல்லையில் இருந்த காட்டிற்குச் சென்றனர். மக்கள் நடமாட்டமில்லாத இடத்தில் ஒரு பெரிய பள்ளம் தோண்டினார்கள். தெனாலிராமனை அந்தப் பள்ளத்தில் இறக்கி மண்ணால் கழுத்தளவு மூடி விட்டு யானையைக் கொண்டுவர அரண்மனைக்குச் சென்றனர்.*

*தெனாலிராமன் தப்பிச் செல்ல வழியறியாது திகைத்து மண்ணுக்குள் தவித்துக் கொண்டிருந்தான். சற்று தூரத்தில் யாரோ வருவது தெரிந்தது. தெனாலிராமன், "அய்யா!" என பெருங்குரலெடுத்துக் கூவி அழைத்தான். அந்த மனிதன் ராமனின் குரல் கேட்டு மெதுவாக அச்சத்துடன் அருகே வந்தான். அவனைப் பார்த்த ராமன், "பயப்படாதீர்கள். அருகில் வாருங்கள்."என அழைத்தான். வந்தவன் தன் முதுகில் இருந்த துணி மூட்டையைக் கீழே இறக்கி வைத்து விட்டு ராமனின் முகத்தருகே அமர்ந்தான்."யாரையா! உன்னை மண்ணுக்குள் புதைத்தது?" என்று கேட்டான்.*

*இராமன் வந்தவனின் முதுகைப் பார்த்து அவன் ஒரு வண்ணான் என்றும், எப்பொழுதும் மூட்டை சுமந்ததனால் அவன் முதுகு வளைந்து கூனனாகியிருக்கிறான் என்பதையும் தெரிந்து கொண்டான். சட்டென சமயோசிதமாய்ப் பேசினான் இராமன்."அய்யா! நானும் உம்மைப் போல கூனனாக இருந்தேன். ஒரு பெரியவர் என்னிடம் ஒரு நாள் முழுவதும் மண்ணுக்குள் புதைந்திருந்தால் கூன் நிமிர்ந்து விடும் என்று சொன்னார். நான் காலை முதல் மண்ணுக்குள்ளேயே இருக்கிறேன். என்னைத் தூக்கி விடுகிறீர்களா, என் கூன் நிமிர்ந்து விட்டதா என்று பார்க்க ஆசையாக இருக்கிறது", என்றான். கூனனும் இராமனை வெளியே எடுத்தான். இராமன் தன் கூனல் நிமிர்ந்து விட்டதாக மகிழ்ச்சி கொள்வது போல நடித்தான். அதை உண்மையென நம்பிய கூனனாகிய வண்ணான் தன்னையும் மண்ணில் புதைத்து, தன் கூனல் நிமிர வழி செய்யும்படி வேண்டிக் கொண்டான். தெனாலிராமனும் வண்ணானைக் குழிக்குள் இறக்கி கழுத்து வரை மண்ணால் மூடிவிட்டுத் தன் வீடு நோக்கி ஓடியே விட்டான். யானையுடன் வந்த காவலர்கள் தாங்கள் விட்டுச் சென்ற இடத்தில் இராமனுக்குப் பதிலாக வேறொருவன் இருப்பதைப் பார்த்துத் திகைத்தனர். அந்த வண்ணானை அழைத்துக் கொண்டு மன்னரிடம் சென்று ராமனின் தந்திரத்தைக் கூறினர். ராமனின் திறமையைக் கண்டு அவனை மன்னித்து விடுதலை செய்தார் மன்னர்.*

*ரம்யா நவநீத்*

## கோப்பல்தமிழ்க் கல்வி மையத்திற்கு உதவ ஒரு எளிய வாய்ப்பு

1. **நீங்கள் அமேசானில் வாங்க விரும்பும் அதே பொருளை , அதே விலையில் https://smile.amazon.com இணையதளம் மூலம் பெறுங்கள்.**
2. **நீங்கள் செலவு செய்த தொகையில் ஒரு சிறு பகுதி , அமேசான் (Amazon) நிறுவனத்தால் கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு நன்கொடையாக வழங்கப்படும்.**
3. **"DFW tamil foundation" என்று smile.amazon.com இணையதளத்தில் தேடுங்கள். செந்தமிழ் பணிக்கான உங்கள் ஆதரவைத் தொடங்குங்கள்.**

amazon.com Smile
You shop. Amazon gives.

## நிகழ்வறிவோம்



செல்லக் குழந்தைகளே, இந்த மாதம் சாஸ்தா தமிழ் அமைப்பு நடத்திய திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டியில் நமது பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் பங்கு பெற்றனர். அவர்களில், ஆயிரத்து முந்நூற்று முப்பது திருக்குறள்களையும் மனப்பாடமாக கூறினார் நமது தமிழ்ப் பள்ளி, ஏழாம் நிலை ஆசிரியர் திரு.செந்தில் துரைசாமி. அவரை வெகுவாகப் பாராட்டி "குறளரசன்" என்று அனைவரும் புகழ்ந்தனர். அவரின் இந்தச் சாதனையை, நம் கோப்பெல் தமிழ்ப் பள்ளியும் பாராட்டி பெருமிதம் கொள்கிறது.





மெட்ரோ ப்ளக்ஸ் தமிழ்ச் சங்கம் நடத்திய 2018 பொங்கல் திருவிழாவில் ,பல்வேறு தமிழ் பள்ளிகளின் பேரணி நடைப்பெற்றது. நம் பள்ளியின் சார்பாக மாணவர்கள் பேரணியில் கலந்து கொண்டதோடல்லாமல் ,அங்கு நடைப்பெற்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று சிறப்பித்தனர். அவர்கள் அனைவருக்கும் நம் நல் வாழ்த்துகள்.




கடந்த ஜனவரி மாதம் 13ஆம் நாள், டாலஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கத்தின் சார்பாகப் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் நம் கோப்பல் தமிழ்ப் பள்ளி மாணவர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. இதன் பின் நம் பள்ளியின் ஏழாம் நிலை மாணவர்களான ரூப்பேஷ் தினகரன் மற்றும் வருண் ராமநாதன் நடத்திய நகைச்சுவை நாடகம் இடம் பெற்றது.

தொலைக்காட்சிகளில் இடம்பெறும்.ராசிபலன் நிகழ்ச்சியினை நையாண்டியும் பகடியும் கலந்து மாணவர்கள் நிகழ்த்திய விதம் அவையினரை சிரிப்பில் ஆழ்த்தியது. மாணவர்களின் இயல்பான தமிழ்ப்பேச்சும் நகைச்சுவையும் அனைவரின் பாராட்டையும் பெற்றது. மாணவர்களுக்குத் தமிழ்ப்பள்ளியின் வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள் !!.

## மாணவர் பக்கம்


எனக்கு கதையில் ரொம்ப பிடிச்சது வந்து
நாகேஷ் பெண்சா மேல நினைப்பியும் முன்னு
திகாதரர்கள் எல்லோரும் பாஷாவுடைய வீட்டுக்கள்
இருந்தப்பையும். எனக்கு இது பிடிச்சது
என்ன இந்த இரண்டு சீன்னும் வேடிக்கை-
யாக இருக்கும். எனக்கு அந்த இரண்டு சீன்
தான் பிடிச்சது அனாலும் எனக்கு மொத்த
படமும் பிடிச்சது என்னனால் ஒரு நல்ல
பாடத்தை சொல்லி தரது. இந்த படத்தில்
நல்லா வேடிக்கையாக சொல்லிக் கொடுக்கும்.
இந்த படத்தி என்னுடைய மிக பிடித்த
நடிகர் வந்து நாகேஷ். நாகேஷ் இந்த
படத்தில் ரொம்ப நன்றாக நடித்திருப்பார்
அவருடைய பண்புகள் மாறிமட
இருக்கும் அனாலும் எல்ல பண்புகளும்
உண்மையாக அந்த (கொரப்பனை) நிஜ
ஆள் மாதிரி இருக்கும். இந்த படம்
ரொம்பு நன்றாக இருந்தது. இந்த கதை
வேறு தமிழ் படத்திலுடைய கதையோட
ஒப்பிட்டு பார்த்த இது வேற மாதிரி
இருக்கு. இந்த கதையுடைய பாடம் நன்டாக
இருக்கிறது. வேறு படத்தில் பாடம்
தண்டமாக இருக்கும். இது எல்லாம்
இருக்கிறது, அனால் இந்த கதையுடைய
பாடம் என்னை சொல்லவில்லை.
இந்த கதையோட பாடம் வந்து
வேறயாருக்கோ உன்னைவிட கூட
வசதி இருந்தாலும், இவங்க மாதிரி
இருக்காதீங்க. உங்களால் செய்ய முடிந்ததைச்
செய். அதுதான் உனக்கு நல்லது.

*கதிர் சேரலாதன்- நிலை 8*

## குறள் சொல்லும் பொருள்

*தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*

*நாவினாற் சுட்ட வடு*

சொற்பதம்:

தீயினாற் சுட்டபுண் - நெருப்பு சுட்ட புண்

உள்ளாறும் - உள்ளே ஆறிவிடும்

ஆறாதே - ஆறாதது

நாவினாற் சுட்ட வடு - கொடிய வார்த்தைகளால் சுட்ட தழும்பு

ஒருவருக்கு தீயினால் ஏற்பட்ட புண் காலப்போக்கில் ஆறிவிடும். ஆனால் ஒருவரை கொடிய வார்த்தைகளால் திட்டினால் அவர் மனதில் அது ஆறாத தழும்பைப் போல் எப்போதும் இருக்கும்.

*அருண்*

## காலத்தை வென்றவர் – உசைன் போலட்



ஜமைக்கா நாட்டில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தவர் உசைன் போலட். சிறுவயது முதலே விளையாட்டில் தீவிர ஆர்வம் கொண்டவராக இருந்தார். ஆரம்பத்தில் கிரிக்கெட் மற்றும் கால்பந்து விளையாடினார். தனது பள்ளியில் நடந்த ஓட்டப்பந்தய போட்டியில் முதல் பரிசு வென்றது முதல், தனது கவனத்தை ஓட்டப் பந்தயங்களின் மீது திருப்பினார்.

உசைன் போலட் 2001 ஆம் ஆண்டு உலக இளையோர் தடகளப் போட்டிகளில் பங்கேற்றதன் மூலம் உலக அரங்கிற்கு அறிமுகம் ஆனார். ஆரம்பத்தில் ஓட்டப்பந்தயத்தில் முழுகவனமின்றி துடுக்குத்தனமும் குறும்புத்தனமும் மிக்கவராகத் திகழ்ந்தார். சொந்த ஊரில் நடந்த போட்டியில் பதற்றத்தின் காரணமாக காலணிகளை மாற்றி அணிந்து ஓடினார்.


2004 ஆம் ஆண்டு பயிற்சியாளரான ஃபிட்ஸ் கோல்மேனின் வழிகாட்டுதலின் கீழ் உசைன் போல்ட், தொழில்முறை வீரராக உருவெடுத்தார். அந்த ஆண்டு நடந்த ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் முதல் சுற்றிலேயே தோற்று வெளியேறினார். அதே ஆண்டு நடந்த மகிழுந்து (கார்) விபத்தில் காயமடைந்தார். வைராக்கியத்துடன் தொடர்ந்து கடும் பயிற்சியில் ஈடுபட்ட உசைன் போல்டுக்கு வெற்றிகள் குவியத் தொடங்கின. 2005 மற்றும் 2006-ஆம் ஆண்டுகளில் உலகத் தரவரிசையின் முதல் ஐந்துக்குள் நுழைந்தார். பெய்ஜிங் 2008 ஒலிம்பிக்கின் 100 மீ இறுதிப் போட்டியில் 9.69 நொடிகளில் வெற்றியை எட்டி புதிய உலக சாதனைப் படைத்தார். இதனை அடுத்து 200 மீ பந்தயத்திலும் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தார். தொடரோட்டப் பந்தயத்திலும் வென்று தனது மூன்றாவது பதக்கத்தை வென்றார். இதே போன்று லண்டன் 2012 ஒலிம்பிக்கிலும் 100 மீ, 200 மீ மற்றும் தொடரோட்டத்திலும் தங்கம் வென்றார். நான்காண்டு இடைவெளிக்குப்பின் ரியோ 2016 ஒலிம்பிக்கிலும் மூன்று போட்டிகளிலும் தங்கம் வென்றார். இச்சாதனைகளின் மூலம் "உலகின் மிகச்சிறந்த தடகள வீரர்" என்ற உயர்ந்த நிலையை அடைந்தார் உசைன் போலட்.

*-அருண்*

## Vocabulary - சொல்லகராதி

| | |
|---|---|
| *A la carte* | தெரிவு உணவு வகை |
| *Advisory panel* | ஆலோசனைக் குழு |
| *Effigy* | உருவ பொம்மை |
| *Environment* | சுற்றுப்புறம் / சுற்றுச்சூழல் |
| *Escalator* | மின் படிக்கட்டு |

## பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும்



## ஹ.. ஹ.. ஹா....

*நாம் ஒல்லியா, குண்டா என்று 'சுற்றுப்புறம்' தான் தீர்மானிக்கிறது*

*-ஸ்ரீநி*

*'கண்ட'படி பேசினால் வழக்கில் நீதி கிடைக்கும்*

*-ஸ்ரீநி*

## எண்களை வரிசையில் இணைக்கவும்



## தமிழ் பழமொழி

***அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியே***

*விளக்கம் :*

*அகத்தியில் கீரையும் பூவம் தான் உணவுக்கும் மருந்துக்கும் பயன்படும். அதில் எவ்வளவு தான் காய் காய்த்தாலும் உணவுக்குப் பயன் படாததால் வீட்டினுள் எடுத்துச் செல்வதில்லை. தேவை இல்லாத ஒன்று எவ்வளவு தான் இருந்தாலும் அதனை யாரும் மதிக்க மாட்டார்கள். -சங்கீதா*




***Volunteer registration link:***

https://goo.gl/forms/bmKbVWje5oRHGI5Q2

## விடுகதை

*1. கையிலே கர்ணம் போடும் கணக்குப் பிள்ளை யார்?*

*2. வெள்ளைக் குதிரையும் கறுப்புக் குதிரையும் மாறி மாறி ஓடும்; பிடிக்க முடியாது.*

*விடை அடுத்த இதழில்...*

*சென்ற இதழ் விடுகதைகளின் விடைகள்:*

*1. பனித்துளி 2. கண்ணீர் -சங்கீதா*

## கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

**பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் படைப்புக்களை அனுப்பித் துளிரில் பங்களிக்க முடியும். உங்கள் கட்டுரைகளை *newsletter@coppelltamil.com* என்கிற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். இதழில் வரும் கட்டுரைகளின் படைப்பாளிகள் ஆண்டு விழாவில் கௌரவிக்கப் படுவார்கள்.**

## கோப்பல் தமிழ்க் கல்வி மையம்

***இடம்: IXL Academy, 773 S MacArthur Blvd, #225 Coppell TX 75019;***
***கல்வி நாள்: ஞாயிற்றுக்கிழமை; நேரம்: 5:00—7:00PM***
***www.coppelltamil.com email: connect@coppelltamil.com***

*https://www.facebook.com/CoppellTamil/?view_public_for=1019360444741468 http://coppelltamil.com/calendar.htm*